OS: 302/2018

Date:19.09.2023

பெயர்  : சந்திரன்

**பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>-** வாதிகள் தரப்பில்

வாதிகள் எவ்வளவு சொத்திற்கு வழக்கு போட்டு உள்ளார்கள் என்று தெரியுமா என்றால் 1 ஏக்கர் 18 செண்டு நிலத்திற்கு வழக்கு போட்டுள்ளார்கள். மேற்படி சொத்திற்கான சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.3/3 ஆகும். இந்த சொத்திற்கு சக்குபந்தி விபரம் தெரியுமா என்றால் தெரியும், சொத்திற்கு வடக்குபுறம் சர்வே எண்.3/3 ன் வேறு சொத்துக்கள் உள்ளது, கிழக்கு பக்கம் என் அப்பாவுக்கு பாத்தியப்பட்ட நிலம் மேற்படி சர்வே எண்ணிலேயே உள்ளது. மேற்கு பக்கம் எனது சித்தப்பா சுப்ரமணியம் நிலம் உள்ளது, அதன் சர்வே எண்.3/2 ஆகும், தெற்கு பக்கம் கரடு உள்ளது. மேற்படி சொத்தானது என் தாத்தா ராமாசாமி கவுண்டர் 1971 ம் வருட பாகப்பத்திரத்தில் A செட்யூல் ஆக ஒதுக்கப்பட்ட சொத்து என்று சொன்னால் சரிதான். எனக்கு பத்திரங்கள் படிக்கத்தெரியுமா என்றால் ஓரளவு படிப்பேன். மேற்படி பாகப்பத்திரத்திரத்தில் A செட்டியூல் சொத்தினை ராமாசாமி கவுண்டரும், மேற்படியார் மனைவி சின்னமாளும் அடைந்து அனுபவித்து கொள்ள வேண்டும் என 16 பக்கத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான்.

பாகப்பிரிவினை செய்வதற்கும் முன்பும் வழக்கு சொத்து ராமசாமி கவுண்டருக்கும், அவரது மனைவிக்கும் பாத்தியப்பட்டு இருந்தது என்றால் சரிதான். என் தாத்தாவிற்கு 7 பேர்கள் வாரிசுகள் ஆவார்கள். அதில் என் தந்தை ஒரு வாரிசு ஆவார். பாகப்பத்திரத்தில் பொது சராவில் என் ஆயுளுக்கு பின்பு எனது சொத்துக்களை 2 முதல் 7 லக்கமிட்டவர்கள் சர்வ சுதந்திரத்துடன் அடைந்து கொள்ள வேண்டியது என பாகஆவணத்தில் 16 ஆவது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த சொத்துக்கள் ஏற்கனவே என் தாத்தா இருக்கும்போதே விற்பனை செய்து விட்டார். நான் என்னுடைய பதில் உரையில் 1974 ல் ஒரு 40 செண்டு நிலம் தனது மருமகள் ராமாயி அம்மாளுக்கு எழுதி கொடுத்துள்ளதாக குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சரிதான். 22.05.1978 ம் தேதியில் 1 ஏக்கர் 18 செண்டு நிலம் எனது தந்தை சண்முகத்திற்கு எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டு உள்ளேன். எனது தந்தை சண்முகம் தவிர மற்ற வாரிசுகள் என் தாத்தவிற்கு உள்ள நிலையில் மேற்படி இரண்டு ஆவணங்களும் என் அப்பா போலியாக தாயார் செய்து உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி இரண்டு ஆவணங்கள் ஆன என் தந்தைபெயரில் ஒரு ஆவணமும், எனது தாயார் பெயரில் ஏற்பட்டுள்ள

ஆவணமும் இந்த வாதிகளுக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி இரண்டு ஆவணங்களும் இன்றுவரை நடைமுறைக்கு வரவில்லை என்று சொன்னால் தவறு ஆகும்.

1 ஏக்கர் 18 செண்டு மட்டும் ராமாசாமிக்கு பாத்தியப்பட்டு இருந்த நிலையில் அவர் எனது தந்தைக்கு 1 ஏக்கர் 58 செண்டு நிலம் எழுதிக்கொடுத்த ஆவணம் போலியானது என்றால் சரியல்ல. மேற்படி பாக ஆவணத்தின்படி ராமாசாமி கவுண்டருக்கும் பாத்தியம் இல்லாத சொத்துக்களை மேற்படி இரண்டு கிரைய ஆவணங்கள் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது செல்லாது என்றால் சரியல்ல. வாதிகள் மேற்படி கிரைய ஆவணங்களையும் போலியான பத்திரம் என்று சொல்லப்பட்ட பின்பும் நான் சொத்துக்களை பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது உடன் பிறந்ததோர்கள் எத்தனை நபர்கள் என்றால் 7 பேர் ஆவார்கள், அதில் 2 பெண் வாரிசுகள், அதில் என்னுடன் பிறந்த சகோதரர் திருமணம் ஆகமால் இறந்து விட்டார், மீதி என்னையும் சேர்த்து 4 பேர் ஆண் வாரிசு ஆவார்கள். நான் என்னுடைய பதில்உரையில் எனது தந்தை காலம் ஆன பின்னிட்டு என் உடன் பிறந்தவர்களை பொறுத்து அவர்களுக்கும் பாகம் உள்ளதா என்பது குறித்து பதில் உரையில் குறிப்பிட்டு உள்ளேனா என்றால் என்னுடன் பிறந்தவர்களுக்கு இடையே எந்த பிரச்சனையும் இல்லை என்பதால் குறிப்பிடவில்லை.

**வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒப்பம்/-DW1

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்